**<u>O.S.No. 20/2015</u>**

**<u>PW1 : ஜோதிநாதன்</u>** தேதி 23.01.2026

<u>வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 5 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என்னுடைய பதில் உரையில் என் தாத்தாவுக்கு 1/6 பங்கும் என் அப்பாவிற்கு 1/6 பங்கு பாத்தியம் இருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. மாரியாண்டி இறந்ததால் 1/6 பங்கு என் அப்பா சுந்தரத்திற்கும் 9 ம் பிரதிவாதி இறந்து போன நல்லமாளுக்கும் பாத்தியம் ஏற்பட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. மாரியாண்டி 1956 க்கு முன்பே இறந்துவிட்டதால் என் தந்தை மட்டும் தான் தாவா சொத்துகளில் 1/3 பாகம் இருந்தது என்றால் சரியல்ல. 1/3 பங்கை இரண்டு முறை விற்று விட்டு மீண்டும் சொத்தில் பங்கு இருப்பதாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பங்கை விற்ற விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்து கொண்டேன். எனக்கோ 9 ம் பிரதிவாதிக்கோ தாவா சொத்தில் உரிமையோ பங்கோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. மாரியாண்டி அல்லது சுந்தரம் ஆகியோரின் வாரிசுகள் என்ற முறையில் நான் எவ்வித பங்குரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே சொத்துகளை 2 முறை கிரையம் கொடுத்து விட்டதால் அதில் எனக்கு எவ்வித பங்குரிமையும் இல்லை என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.